DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No.173 /2022**

Deposition of Witness: DW1.

| | | | |
|---|---|---|---|
| Name | ஜெயச்சந்திரன் | Father Name – | கிருஷ்ணமூர்த்தி |
| Age | 62 | Village – | மல்லிங்காபுரம் |
| | | Taluk – | உத்தமபாளையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.07.2026.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1. எனது நிலத்திற்கு வடமேற்கே வாதிகள் நிலம் உள்ளது என்றால் சரிதான். 1ம் வாதியின் தாயார் சரஸ்வதி 12.09.1989ம் தேதி அந்த இடத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் வாதியின் தாயார் சரஸ்வதி 1ம் வாதிக்கு 10.12.2009ம் தேதி தான பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகளின் வீட்டிற்கு தெற்கு பக்கம் கிழமேல் பாதை உள்ளது என்றால் வண்டிப்பாதை உள்ளது. மேற்படி வண்டிப்பாதைக்கு தெற்கு பக்கம் ஞானமணியின் நிலம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகளின் வீட்டிற்கு கிழக்கு பகுதியில் உள்ள பாதைக்கு கிழக்கில் உள்ள ஞானமணியின் வீட்டிற்கு கிழக்கு பக்கம் நான் 8 செண்ட் நிலம் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான்.

2. நான் எப்போது கிரையம் வாங்கினேன் என்றால் 04.02.1992ம் தேதி வாங்கினேன். நான் கிரையம் வாங்கியபோது நான் வாங்கிய 8 செண்ட் உட்பட மொத்தமுள்ள 16 செண்ட் நிலத்திற்கும் வில்லங்க சான்றிதழ் எடுத்துப்பார்த்தேனா என்றால் வில்லங்க சான்றிதழ் எடுத்துப்பார்க்கவில்லை. நான் கிரையம் வாங்கிய சமயத்தில் வாதி அவருடைய நிலத்தில் வீடு கட்டியிருந்தார் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கும்போது சர்வே செய்து வாங்கினேனா அல்லது சர்வே செய்யாமல் வாங்கினேனா என்றால் சர்வே செய்து தான் வாங்கினேன். அவ்வாறு சர்வே செய்யும்போது எனது வீட்டிற்கு மேற்கு

பகுதியில் என்ன என்ன இருந்தது என்றால் அது பற்றி எனக்கு சரியாக நியாபகம் இல்லை.

3. நான் கிரையம் வாங்கியபோது வாதி வீட்டிற்கு தெற்கு பக்கமும் ஞானமணி வீட்டின் வடக்கு பக்கமும் பாதை இருப்பதை தெரிந்து தான் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி பாதையின் நீளம் மற்றும் அகலம் எவ்வளவு என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியாது. மேற்படி பாதையை தற்போது நானும் வாதிகளும் ஞானமணியும் பொது பாதையாக தான் பயன்படுத்திவருகிறோம் என்றால் நத்தம் சர்வேக்கு பின்பு பொது பாதையாக தான் பயன்படுத்திவருகிறோம். வாதிகளின் நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.909/4C1. பொது பாதையானது சர்வே எண்.909/4C2 என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு தெற்கே உள்ள ஞானமணி வீட்டின் சர்வே எண்.909/4C3 என்றால் சரிதான். என்னுடைய நிலத்தின் சர்வே எண்.909/4C4 என்றால் சரிதான்.

4. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ளது தான் அந்த பொது பாதை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணமும் பொது பாதைக்கானது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 புகைப்படங்களில் மேற்கு புறத்தில் தகரமோ கற்குவியலோ இல்லை என்றால் சரியல்ல, மேற்கு புறத்தில் பொது பாதையில் 6 அடி அகலத்தில் தகரம் வைத்து ஆக்கிரமித்துள்ளார். மேற்படி பொது பாதையில் 6 அடி அகலத்திற்கு ஆக்கிரமிப்பு உள்ளது என்பதை நிரூபணம் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். பொது பாதையின் அகலம் 10 அடி தான் என்றும், நான் தான் பொது பாதையில் வாதிகளுக்கு இடைஞ்சல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

5. நான் கிரையம் வாங்கும்போதும் பொது பாதையாக தான் இருந்தது என்றும், அதை என்னுடைய சொத்தாக மாற்ற வேண்டும் என்பதற்காக பி.வா.சா.ஆ.3 ஆவணம் மூலம் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4 ஆவணம் என்னுடைய பட்டா என்றால்

சரிதான். சர்வே எண்.909/4C2 க்கான பட்டாவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.909/4C2 க்கான பட்டாவை நான் தாக்கல் செய்தால் அது பொது பாதை என்பது தெரிந்து விடும் என்பதால் நான் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல, அது பொது பாதை தான். பொது பாதையை வாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும் அதை நீக்கரவு செய்ய வேண்டும் என்று நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை, காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன். காவல்நிலையத்தில் புகார் அளித்தபோது காவல் துறையினர் நிலத்தை அளவை செய்ய அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான். நான் நில அளவை செய்வதற்கு நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் வாதிகள் சர்வே செய்வதற்கு நடிவடிக்கை எடுப்பதாக சொன்னதால் நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. நான் நில அளவை செய்வதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றும், அவ்வாறு எடுத்தால் வாதிகள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்பது தெரியவந்துவிடும் என்பதால் தான் நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யவில்லை, நில அளவைக்கும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

6. 10.10.2022 ம் தேதி வழக்குரை சொத்தில் பிரச்சனை ஏற்பட்டது என்றால் தேதி சரியாக நியாபகம் இல்லை 2022 ம் ஆண்டு பிரச்சனை ஏற்பட்டது. நான் இடைஞ்சல் செய்ததால் தான் இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கை வாதிகள் தாக்கல்செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கை வாதிகள் தாக்கல்செய்த பின்பும் வாதிகள் பொது பாதையை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றும், அதை அகற்ற வேண்டும் என்றும் எதிர்கோருரிமை தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யாததால் தான் நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் எனக்கு எப்போது இடைஞ்சல் செய்தார்கள் என்றால் 2022 ம் ஆண்டு இந்த வழக்கு தாக்கல்செய்வதற்கு முன்பாக இடைஞ்சல் செய்தார்கள்.

7. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் பொது சந்தில் வாதிகளின்

அனுபவத்திற்கு நான் தொடர்ந்து இடைஞ்சல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் எனது வாகனத்தை வைத்து வாதிகளின் வீட்டில் இடித்து வாதிகளின் வீட்டை சேதப்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் வாதிகளுக்கு இடைஞ்சல்செய்து வருவதால் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.07.02 13:42:08 +0530

District Munsif,
Bodinayakanur.